14. பூரணசந்திரன் வந்தாகிவிட்டது. சொன்னபடி கண்ணன் வராமையால், பெ றுமையை முற்றும் இழந்த ராதை, தோழியை நோக்கி, அவன் என்னதான் உன்னிடம் சொன்னான்? திரும்பவும் சொல் பார்க்கலாம் என்றும், நீ போய் பார்த்தாவது வரக்கூடாதா? என்றும் தன் நிலைக்கொள்ளாமையைக் காட் டுகிறாள்.

தாளம் : ஆதி

ஆ : ஸ ரி ஸ க ம ப த நி ஸ் 14-வது மேளகர்த்தாவின்
அ : ஸ் நி த ப ம க ரி ஸ ஜன்யம்

**பல்லவி**

சொன்னபடி கண்ணன் வரவில்லையே - நான்
என்ன செய்வேன் - தோழி (சொன்ன)

**அனுபல்லவி**

என்ன தான் உன்னிடம் சொன்னான் - என்பதை
என்னிடம் திரும்பவும் உரைத்திடுவாய் - தோழி (சொன்ன)

**சரணம்**

பூரணசந்திரன் பொலிவுடன் இருக்கின்றான்
பூத்த மலர் வாசம் காற்றில் வருகுதே
காரணம் அறியேனே கலங்குகின்றதே மனம்
காரிகையே நீ போய் பாந்து வரக்கூடாதோ (சொன்ன)

**பல்லவி**

| $I_4$ | O | O |
|---|---|---|
| ; , ப த நி நீ ஸ்ா ; ; ரீ<br>சொன்னபடி கண் ணன்<br>; , பாப தப பா, மம கப ம<br>என்ன செய் வேன் தோ. . .<br>; , நி ஸ்ா நி த பா ; தா பா<br>என் ன . செய் வே ன்<br>; , -<br>. (சொன்ன) | ; , நிநி ஸ்ாஸ்<br>வர வில்லை<br>க ரீ ; ; ,<br>ழி .<br>; ; ; ; | ஸ் நிநி த தா பா<br>யே . . . நா ன்<br>; ; க ம பா<br>நா . ன்<br>; ; ; ; |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; , ஸ்ரி ஸ் நித தாப பத நிநீ<br>என் னதா ..ன் உன் னி டம்<br>; , ஸ்ரி ஸ்நி ததா பப தநிநீ<br>என் னதா .. ன் உன்னிடம்<br>; , நீஸ் ஸ்ா ஸ் நிநி தாத பா<br>என்னிடம் தி . ரு ம் பவும்<br>தா ப -<br>. (சொன்ன) | ஸ்ரி ஸ்ரி நீஸ்ா<br>சொன்.. னா ன்<br>ஸ்ரி ஸ்ரி நீஸ்ா<br>சொன் .. னா ன்<br>; , பத பப ம<br>உரைத் திடு | ஸ்நி நித பா தப<br>எ ன் .. ப தை<br>ஸ்ரி க்ம் க்ரி ஸ்ா<br>எ ன் ... ப தை<br>கம கரி கம பா<br>வா .. ய் தோ ழி |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , பா பப மம கப மக ரிஸா<br>பூ ர ண . ச ந் .. தி. ரன்<br>பா, ப த நி ஸ்ா ஸ்நிநித பாதப<br>ன் பூ. த்த ம ல . . ர் வாசம் | ; , ஸம கமா<br>பொலிவுடன்<br>; , பாத பம<br>காற்றி . ல் | பா பா ப த தா<br>இ ரு க் கி ன் ற<br>மக பம கரி ஸா<br>வ. ரு. கு. தே |

| $I_4$ | O | O |
|---|---|---|
| ; , ப தா நிநி ஸ்ஸாரி ஸாரீ<br>கா . ரணம் அ றி யே. னே<br>; , ப தா நி ஸ் ஸ்நிநித பா தா<br>கா . ரிகை யே.. . நீ போ<br>தா ப -<br>. (சொன்ன) | ; , க்மா க்ரி<br>கலங்குகின்<br>பா, பத பப ம<br>ய் பாந்து வ. | ஸா ஸ்நிரீ ஸா<br>ற தே மனம்<br>கம கரி கம பா<br>ர. க்கூ. டா. தோ |